தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஏ. சோமசுந்தரம், பி.எச்டி.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (உழவியல்)

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 15-5-2013

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## சின்ன வெங்காயத்தின் விலை அதிகரிக்கும்

தேசிய தோட்டக்கலை வாரியத்தின் முதல் முன்கூட்டிய கணக்கீட்டின் படி (2012-13)ம் ஆண்டின் தமிழ்நாட்டில் வெங்காயத்தின் பரப்பு மற்றும் உற்பத்தி முறையே, 41570 எக்டர் மற்றும் 667740 டன்கள் ஆகும். இது 2011-12ம் ஆண்டில் 37120 எக்டர் மற்றும் 556450 டன்களாக இருந்தது. இதில் 70 சதவீத பரப்பிற்கு மேல் சின்ன வெங்காயம் ஆகும்.

கடந்த ஆண்டு ஏப்ரல்,மே மாதங்களில் சின்ன வெங்காயத்தின் பண்ணை விலை கிலோவிற்கு ரூபாய் 10-11 வரை இருந்தது. ஆனால் இந்த ஆண்டு கிலோவிற்கு ரூபாய் 30-35 வரையாக இருக்கிறது. வர்த்தக மூலங்களின் படி விதைப்பு மற்றும் குறைந்த மழையளவு காரணமாக சின்ன வெங்காயம் வரத்து குறைந்துள்ளது. சந்தைக்கு சின்ன வெங்காய வரத்து நாளொன்றுக்கு 2500-3500 (75 கிலோ / 1 மூட்டை) மூட்டைகளாக உள்ளது. ஆனால் கடந்த ஆண்டு இது 5000 மூட்டைகளாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. அதிகளவு ஏற்றுமதி வாய்ப்புகள் மலேசியாவில் இருந்து வருகிறது.

தை, மாசிப் பட்டத்தில் விதைத்த சின்ன வெங்காயம் தற்போது கோயம்புத்தூர், திண்டுக்கல், தேனி, பெரம்பலூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் இருந்து சந்தைக்கு வந்து கொண்டிருக்கிறது. இதில் 60 சதவீதத்திற்கும் மேல் நல்ல தரமான நாற்றுக்காயாக உள்ளது. நாற்றுக்காயின் சேமிக்கும் தன்மை நடவுக் காயின் சேமிப்பு தன்மையை விடக் குறைவு ஆகும்.

தமிழ்நாட்டிற்கு முக்கியமான போட்டியாளர் கர்நாடகா ஆகும். கர்நாடகாவின் உற்பத்தி தமிழ்நாட்டின் விலை ஏற்றத்தாழ்வுகளில் முக்கியப் பங்காற்றுகிறது. கர்நாடகாவில் இருந்து சின்ன வெங்காய வரத்து தற்போது முடிவடைந்துள்ளது. கர்நாடக விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் தமிழ்நாட்டில் இருந்து விதை வெங்காயத்தை மே மாத நடவுக்காக கொள்முதல் செய்து வருகின்றனர். ஆகஸ்டு மாதத்தில் இருந்து கர்நாடக வரத்துக்கள் தமிழ்நாட்டிற்கு வரத் துவங்கும்.ஆயினும் தற்போது விலை குறைவிற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவே.

விவசாயிகள் சந்தை முடிவுகளை எடுக்க ஏதுவாக கடந்த 15 ஆண்டுகளாக திண்டுக்கல் சந்தையில் நிலவிய சின்ன வெங்காயத்தின் விலையை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தேசிய வேளாண்மைப் புதுமைத் திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம் ஆராய்ந்தது. ஆய்வு முடிவுகளின் படி சின்ன வெங்காயத்தின் பண்ணை விலை கிலோவிற்கு ரூ.32 முதல் 35 ரூபாயாகவும் மற்றும் முதல் தர வெங்காயம் கிலோவிற்கு ரூ.40க்கு மேல் இருக்கவும் வாய்ப்புகள் உள்ளன. சிறந்த தரமான சின்ன வெங்காயத்தின் விட்டம் 27 மில்லி மீட்டருக்கு மேலேயும், வட்ட வடிவத்துடனும் மற்றும் இளஞ்சிவப்பு முதல் சிவப்பு நிறத்துடனும் இருக்க வேண்டும். கோ1, கோ2, கோ3, கோ4, கோ5, எம்டியூ5, பெங்களூர் ரோஸ் ஆகியன தமிழ்நாட்டில் பயிரிடப்படும் முக்கிய இரகங்கள் ஆகும். விவசாயிகள் சிறந்த தரத்திற்கு கோ5, இரகத்தை பயிரிடுமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர். மே, ஜுன் மாதங்களில் விலை அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளன. விலை உயர்வு, சின்ன வெங்காயத்தை சேமிக்க ஆகும் செலவு மற்றும் வட்டி செலவினங்களை ஈடு கட்டும். இதனால் விவசாயிகள் அதிக விலை கிடைக்க அறுவடை செய்த சின்ன வெங்காயத்தை மே, ஜுன் மாதங்களில் சேமித்து வைத்து விற்க பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள:-**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641003,
தொலைபேசி: 0422-2431405

**தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் :-**

பேராசிரியர் மற்றும் தலைவர்,
காய்கறிப் பயிர்கள் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003,
தொலைபேசி: 0422-6611374
0422-6611283

மக்கள் தொடர்பு அலுவலர்